# பதவி ஸ்ரீபுர பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மே 08 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 டிசெம்பர் 23 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பதவி ஸ்ரீபுர பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவி ஸ்ரீபுர பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொனரப்படவில்லை.

(ஆ) செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கும் வருவாயை சம்பாதிப்பதற்குமென பயன்படுத்தப்பட்ட ரூபா 21,331,327 நிலையான சொத்துக்களுக்குத் தேய்மான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாததால் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் சபையின் உள்ளவாறான செலவினத்தை நிரூபணமாக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நிலையான வைப்புகளுக்குப் பெறப்பட்ட ரூபா 90,400 வட்டியானது வருவாயாகக் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கிய 189 சொத்து விடயங்களது பெறுமதி மதிப்பிடப்பட்டு நிலையான சொத்தின் கீழ் கணக்கிலிடப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டில் நீதி மன்றத் தண்டப் பணமாகப் பெறப்பட்ட ரூபா 141,582 ஆனது ரூபா 197,427 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 55,845 கூடுதலாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

ஓராண்டிற்கு மேற்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டண மற்றும் கடை வாடகை நிலுவையான ரூபா 37,275 மற்றும் ரூபா 479,872 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 7,558,292 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- | --- |
| (அ) | 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிக்கோவையின் 59 ஆம் பிரிவு | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட வியாபார நிறுவகங்கள் தொடர்பாகக் கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) | பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரது 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சபையின் 8 வாகனங்களது எரிபொருள் நுகர்வு 6 மாதங்களுக்கொருமுறை பரிசீலிக்கப்படவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 383,973 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 186,388 ஆகும்.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான உள்ளவாறான செலவினத்துக்கும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட நிதியேற்பாடுகளுக்கிடையே 11 முதல் 237 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவின. அதற்கமைய, வருடாந்த வரவு, செலவுத் திட்டம் முறையான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கபட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 100 | 40 | 60 |
| (ii) | குத்தகை வாடகை | 500 | 126 | 470 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 285 | 220 | 101 |
| (iv) | பிற வருவாய் | 60,363 | 13,673 | 46,944 |

**2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம்**

கிழக்கு மாகாண சபையிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாகப் பெறவேண்டிய ரூபா 439,993 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.4 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவயணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடம் |
|---|---|---|---|
| பதவிநிலை | 01 | - | 01 |
| இரண்டாந்தரம் | 13 | 05 | 08 |
| மூன்றாம் நிலை | 23 | 11 | 12 |
| மொத்தம் | 37 | 16 | 21 |

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) பதவி நிலை மற்றும் இரண்டாம் நிலை என்பவற்றில் ஆயுர்வேத வைத்தியப் பதவி, முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் நான்கு, 2 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 2 நூலகங்களுக்கான பதவிகள் என்பன கணக்காய்வுத் தினத்தன்றும் வெற்றிடமாக இருந்தன.

(ஆ) மின்சாரத் தொழில்நுட்பவியலாளர் பதவி ஒன்று, ஆயுர்வேத உதவியாளர் பதவி ஒன்று, சாரதிக்கான பதவி ஒன்று, 9 தொழிலாளர் பதவிகள் என்பன வெற்றிடமாக இருந்தன.

**2.5 ஒப்பந்த நிர்வாகம்**

பதவி ஸ்ரீபுர பொதுச் சந்தைக் கட்டுத் தொகுதி நிர்மாணவேலையில் ஏற்பட்ட 404 நாட் தாமதம் தொடர்பாக ஒப்பந்தக்காரரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 960,835 தாமதக் கட்டணத்தை மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.6 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தால் கிழக்கு மாகாண நீர் விநியோக அபிவிருத்திச் செயற்திட்டத்தால் சபைக்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ரூபா 4 மில்லியனுக்குக் கூடுதலான நீர்க் குழாய்த் துணைப்பாகங்கள் முறையாகப் பொதி செய்யப்படாமையால் அவை அழிவுற்றவாறிருந்தன.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வரவு, செலவுத் திட்டம்

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) வருவாய் நிர்வாகம்

(உ) மனிதவள முகாமைத்துவம்

(ஊ) ஒப்பந்த நிர்வாகம்